3. தகவல் கோரல்.

விஞக்களுக்கு விடையளிப்பதில் தாமதம்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : என்னுடைய கேள்விகள் கொடுத்து வெகு நாட்களாகியும், இன்னும் அவற்றிற்கு பதில் வரவில்லே. கேள்விகள் லிஸ்டில் வரவில்லே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருங்கள் சொல்லுகிறேன். கேள்விகள் நிறைய கொடுக்கப்பட்டிருக்கின்றன. தங்கள் கேள்விகள் இன்னும் அவைக்கு வரவில்லை என்று உறுப்பினர்களிடமிருந்து நிறைய செய்திகள் வந்து இருக்கின்றன. ஏற்கெனவே குறிப்பிட்டது போல், 41-வது விதியின் கீழ் விவரங்கள் கொடுக்க எந்த, எந்த அமைச்சர் இடத்தில் எத்தனை எத்தனை அறிக்கைகள் பாக்கியிருக்கின்றன என்கிற விவரம் தெரிவிக்குமாறு கேட்டிருக்கிறேன். அமைச்சர்களெல்லாம் பேரவைத் தலைவருடன் ஒத்துழைத்தால்தான் நல்லமுறையில் பணிகள் நடைபெற முடியும். கேள்விகள் எந்த எந்த அமைச்சரிடம் பாக்கியிருக்கின்றன என்கிற தகவலேயும் கேட்டிருக்கிறேன். தகவல் வந்தவுடன், அமைச்சர் களுக்குத் தெரிவிக்கிறேன். அவர்கள் முறையே தங்கள் தங்கள் செயலாளர்களுக்குத் தெரிவித்து, அவர்களேத் துரிதப்படுத்தி, அமைச்சர் கள் செயல் பட்டால், உறுப்பினர்களுடைய குறைபாடுகள் நீங்கும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

4. நடைமுறைக்கேள்வி.

விஞப்பட்டியலில் உள்ள விஞக்களுக்கு விடையளிக்க அமைச்சர் அவையில் இல்லாதிருத்தல்.

திரு. டி. மார்டின் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். ஸ்பீக்கர் சார். இன்றைக்குக் கொடுக்கப்பட்ட கேள்விகளில் மூன்று கேள்விகள் நிதி அமைச்சர் பேரில் உள்ளவை சபையில் வைக்கப்பட்டிருக்கின்றன. நிதி அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்திற்கு சபைக்கு வரமாட்டார்கள், அவர்கள் வி. ஐ. பி. யைப் பார்க்கச் சென்றிருக்கிறார்கள் என்று லாபியில் பேசப்பட்டது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியே பேசுவதை இங்கே சொல்லக் கூடாது.

திரு. டி. மார்டின் : தாங்கள் ஒவ்வொரு அமைச்சருக்கும் குறிப்பிட்ட கேள்விகளே சபையில் வைக்கிறீர்கள். அந்த விதமான கேள்விகளே வைக்கும் போது, இன்று நிதி அமைச்சர் அந்தக் கேள்விகளுக்கு பதில் கொடுக் காததால் அது பற்றிய தகவல்கள் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இந்த மன்றமும் அந்த மூன்று கேள்வி களுக்கும் விடைகளேத் தெரிந்து கொள்ளும் நிலேயில் இல்லே. நாளேக்கு நிகழ்ச்சி நிரல் பட்டியல் கொடுக்கும்போது, இந்த மூன்று கேள்விகளேயும் சேர்த்து இணைத்துக் கொடுக்காவிட்டால், அதன் பதில்களே அறியும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும். ஆகவே, இனிமேல் அப்படிப்பட்ட கேள்விகளேயும் இணைத்துக் கொடுக்க வேண்டும். அதோடு, தாங்கள் இந்த மாமன்றம் கூடும் போது, அமைச்சர்கள் வி. ஐ. பி. போன்றவர்களேப் பார்ப்பதை சபை முடிந்த பிறகு பார்க்கும் முறையை வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினையில் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அமைச்சர்கள் ஒவ்வொரு நாளும் விடையளிக்க வேண்டிய கேள்விகள் குறிப்பேட்டிலே பொறிக்கப் படுகின்றன. என்றாலும், திடீரென்று தவிர்க்க முடியாத காரணங்களால் அமைச்சர் அவைக்கு வர முடியாத நிலே ஏற்படும்போது, முன்கூட்டியே,

தலைவர் அவர்களுக்கு, அந்தக் கேள்விகளை ஒத்திவைக்க வேண்டும் என்று கோரப்படுகிறது. மறுநாள் அந்தக் கேள்விகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை நான் ஆதரிக்கிறேன். அதோடு கூட, மறுநாள் வரும் கேள்விகளோடு இந்தக் கேள்விகளையும் இணைத்து பதில் சொல்ல அமைச்சர் கடமைப்பட்டிருக்கிறார். அந்த அளவில் இணைப்பதற்கும், இந்த அவையினுடைய முன்னவர் என்ற முறையில் அதையும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதற்காக, ஒரு அமைச்சர் வராமல் இருப்பது ஒரு தவறு என்று கூறுவது நல்லதல்ல. திடீரென்று எதிர்பாராத காரணத்தால் வர முடியாமல் இருக்கக்கூடிய காரணங்கள் ஏற்படக் கூடும் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு மார்டின் அவர்கள் சட்டமன்ற விதிமுறைகளை நன்ருகப் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

'The Speaker may, at the request of the concerned Minister, postpone one or more questions entered in the list of questions for a day to a subsequent date.'

அப்படி விதிமுறைகளில் இருக்கிறது. இந்த மாதிரியான நிலைமைகள் வரும் என்று அதற்குத் தக்கவாறு முன்பே விதிகளை உருவாக்கி இருக்கிறார்கள். இதெல்லாம் விதிமுறைகளில் இணைக்கப்பட்டிருக்கின்றன. எந்த விதமான முறைகேடும் நடக்க வில்லை, குறையாகச் சொல்வதற்கு. மேலும் இதை பாயின்ட் ஆப் ஆர்டராக எழுப்ப வேண்டிய அவசியமும் இல்லை.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

விணுக்களுக்கு விடையளிப்பதில் தாமதம்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : தலைவர் அவர்களே, அசெம்பிளி நடவடிக்கைகளிலேயே கேள்வி நேரந்தான் முக்கியமான, சுவாரஸ்யமான நேரம். மந்திரிகளைக் கேட்டு, அஷ்யூரன்ஸ்கள் வாங்கும் வாய்ப்பு இருக்கும். ஆகவே, வருஷக் கணக்கில் கேள்விகள் தூங்கிக்கொண்டு இருக்கின்றன. என் கேள்விகளே தேங்கிக் கிடக்கின்றன. 67 மார்ச் மாதம் கொடுத்த கேள்விகள். நானே கேள்வி போடுவதில் சோம்பேறி (சிரிப்பு) அதுவும் இன்னும் வரவில்லை. ஆகவே, அசெம்பிளியில், இந்தியாவிற்கே முன் மாதிரியாக உள்ள நம்முடைய சபையில் கேள்வி நேரமே பூராவாக இருக்கும் முறையில் சில நாட்கள் நடவடிக்கைகளை நடத்தலாமா என்று யோசிக்க வேண்டும் (சிரிப்பு) என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கேள்வி நேரத்தையே பூராவாக வைத்துக் கொண்டால் அது அவ்வளவு பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. அதற்கு அசெம்பிளிக் கூட்டத்தை வேண்டுமானால் அதிகப்படுத்தலாம். நமக்கும் அதிக விவரங்களைக் கேட்க வாய்ப்பு இருக்கும், மக்களுக்கும் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கும். ஒரு வருஷத்தில் குறைந்தது மூன்று மாதமாவது—அது குறைந்த பட்சம், அதிக பட்சம் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் இருக்கலாம்—கூடுவதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, நான் ஒரு "ஷார்ட் நோட்டீஸ் கொஸ்சின்" கொடுத்து, தலைவர் அனுமதி கொடுத்தும், இன்னும் பதில் கிடைக்கவில்லை. ஏழு நாட்களில் பதில் கொடுக்க வேண்டும் என்று விதி இருந்தும் கூட, அது தேங்கிக் கிடக்கிறது. அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் தங்கள் தங்களுடைய கேள்விகள் பற்றி இந்த இடத்தில் கேட்டால், எந்த விதமான தகவலும் கொடுக்கும் நிலையில் இல்லை. என்னுடைய அறையில் கேட்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.